2015 செப்டம்பர் 22]

கட்டடம் கட்டித் தர ஆவன செய்யப்படுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்தப் பகுதிகளுக்கெல்லாம், புதிய அங்கன்வாடி மையம் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையிலே ஏற்கெனவே ஒரு குழு இருக்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் தொகை, அந்தப் பகுதியிலே கல்வி பயிலக்கூடிய குழந்தைகளின் எண்ணிக்கை, இவற்றையெல்லாம் கணக்கிலே கொண்டு, அந்தக் குழு ஆய்வு செய்து, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் விருப்பத்திற்கேற்ப, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் விருப்புரிமை நிதியிலிருந்து கட்டித் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 322, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத், மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

322—

தங்கும் விடுதி

***50258 திருமதி எஸ். கணிதா சம்பத்:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகத்திலுள்ள அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம், அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயிலுக்கு அருகில் அக்கோயிலுக்குச் சொந்தமான இடம் ஏதுமில்லை என்பதால், பக்தர்களுக்கு தங்கும் இட வசதி செய்து தருவதற்கு தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.*

திருமதி எஸ். கணிதா சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் சிந்தனைத் திறத்தால், சிறந்த நுண்ணறிவால்—தமிழகத்தை உயர்த்திட்ட எங்களின் சிற்பியே! தாயாய், தமிழ் மக்களுக்கு வாய்த்திட்ட தமிழர்களின் தர்ம தேவதையே! (மேசையைத் தட்டும் ஒலி) அன்னை தெரசாவின் பரிவு, (மேசையைத் தட்டும் ஒலி) பேரறிஞர் அண்ணாவின் அறிவு, இவை கலந்து பிரம்மன் படைத்த புதுமை எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) தொட்டதைத் துலங்க வைக்கும் எங்களின் தூய தலைவியை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் திருக்கோயில்களுக்காக எண்ணிலடங்கா திட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. அதில் அன்னதானத் திட்டம், நாள் முழுவதும் அன்னதானம், ஆன்மிக மற்றும் ஒழுக்கநெறி வகுப்பு, சிறப்பு வழிபாடும் பொது விருந்தும், யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம், ஏழை எளியோருக்குத் திருமணம், கம்பிவட ஊர்திகள், மின்கல மகிழுந்து என அம்மாவின் திட்டங்கள் சொல்லில் அடங்காது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது, சதுர் (நான்கு) யுகங்களாக இருக்கக்கூடியது, கருணாகர பெருமாள் கோயில். நம் நாட்டிலேயே

2015 செப்டம்பர் 22]

மதுராந்தகத்தில் மட்டும்தான் இருக்கின்றது. இந்த இராமர் கோயிலுக்கு ஒரு வரலாறு உண்டு. லையோனல் ப்ளேஷ் துரை என்ற ஆங்கிலேயர் கலெக்டராக இருந்தபோது, மதுராந்தகம் ஏரி நிறைந்து, இரவில் வெள்ளம் வந்தது. கலெக்டர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டபோது, அவர் முன்பாக இராமனும், இலட்சுமணனும் காட்சி தந்து ஏரியைக் காத்ததால் அந்தக் கோயிலுக்கு ஏரி காத்த இராமர் கோயில் என்ற பெயர் உண்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கோயிலுக்குச் சொந்தமாக இடம் இல்லை என்றும், இடம் இருந்தால் கட்டித் தருவோம் என்றும் பொருள்படச் சொன்னார். அந்தக் கோயிலுக்கு முன்பாகவே இடம் இருக்கிறது. ஆதலால், அந்த இடத்தில் கட்டித் தருவார்களா என்று கேட்டு, அதேபோல் ஆட்சீஸ்வரர் கோயிலுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் அன்னதானம் வழங்கி இருக்கிறார்கள். அதில் முன்பாக, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைக் கேட்டு உட்காருங்கள்.

திருமதி எஸ். கணிதா சம்பத்: சரி, பக்தர்கள் தங்கும் விடுதி கட்டித் தருவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற இடத்தில் ஏற்கெனவே கடைகள் கட்டப்பட்டிருக்கின்றன. கட்டடங்கள் இருக்கின்றன. காலியான இடம் இல்லை. மதுராந்தகம் அருள்மிகு கோதண்டராம சுவாமி திருக்கோயிலுக்கு சாதாரண நாட்களில் உள்ளூர் பக்தர்களும், சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் சென்னை உள்ளிட்ட பல்வேறு இடங்களிலிருந்தும் பக்தர்கள் வந்து செல்கிறார்கள். பிரம்மோற்சவம் நடைபெறும் 10 நாட்களில் மட்டும் மதுராந்தகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமப்புற மக்கள் சுமார் ஆயிரம் பேருக்கு மேல் வருகிறார்கள். இத்திருக்கோயிலுக்கு வருகை தருகிற பக்தர்கள் தங்கி ஓய்வெடுத்துச் செல்லும் வகையில், ஆண்டாள் சன்னதி மண்டபம், காயத்ரி மண்டபம் ஆகியவை போதுமானதாக உள்ளது.

(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்குள் வந்தபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் மேசையைத் தட்டி வரவேற்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்தர்களுக்குத் தேவையான குடிதண்ணீர் வசதி, கழிப்பிட வசதி ஆகியனவும் செய்து தரப்பட்டு வருகிறது. எனவே, இங்கே தனியாக பக்தர்கள் தங்கும் இடவசதி வேண்டும் என்ற கோரிக்கையை, வருங்காலத் தேவையின் அடிப்படையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 323, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

323—

பூங்காக்கள் அமைத்தல்

***7090 திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், ரோசல்பட்டி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பூங்காக்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*